# தொகுதி மறுவரையறை: தமிழ்நாடெங்கும் கருப்புக்கொடிப் போராட்டம்!



தொகுதி மறு வரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து திருச்சி எடமலைப்பட்டி புதூர் 57, 62 வது வார்டுகளில் தி.மு.க. முதன்மைச் செயலாளர்,அமைச்சர் கே.என்.நேரு கருப்புக்கொடி ஏற்றி,மசோதா நகரை எரித்து கண்டனத்தை பதிவு செய்தார். இந்நிகழ்வில் மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் முத்து செல்வம் , டோல்கேட் சுப்பிரமணி காஜாமலை விஜய் ,வட்டச் செயலாளர் அருமைராஜ், அவைத்தலைவர் மூர்த்தி, சோழன் சம்பத் முத்து பழனி தொமுச குணசேகர் மற்றும் தி.மு.க. கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தொகுதி மறுவரையறை என தமிழ்நாட்டையும் தமிழர்களையும் வஞ்சிக்கும் ஒன்றிய அரசையும், அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க. கூட்டணியையும் கண்டித்து, கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி கரூரில் கருப்பு கொடி ஏற்றி எதிர்ப்பு தெரிவித்தார்.



ஒன்றிய அரசின் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையானது, மக்கள் தொகையை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய தமிழகம் போன்ற மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் செயலாகக் கருதப்படுகிறது. இதனை ஜனநாயகப் படுகொலை என கூறியுள்ள கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் ஆணையின்படி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் பேளகொண்டபள்ளியில் மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் அவர்களின் இல்லத்தில் கருப்புக் கொடி ஏற்றி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் கிறிஸ்டின் தலி ஒன்றிய செயலாளர் சீனிவாசலு ரெட்டி மற்றும் கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்



தஞ்சை மத்திய மாவட்டம், திருவையாற்றில் தென்னிந்திய மாநிலங்களின் குரலை நாடாளுமன்றத்தில் நசுக்கும் வகையில் தொகுதி மறுவரையறை சட்ட திருத்தத்தை கண்டித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கையை ஏற்று மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் கருப்பு கொடியேந்தி, சட்ட திருத்த மசோதா நகலை எரித்து போராட்டம் நடத்தினர். உடன் கழக ஒன்றியச் செயலாளர்கள் வை.சிவசங்கரன், கோ.அரசாபகரன், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மு.அ.பாரதி, கண்ணன், தமிழ்ச்செல்வி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். திருப்பூர், கோவை, நீலகிரி மாவட்டங்களில் அவர் இன்று (17–04–2026) மேற்கொள்ளவுள்ள பரப்புரை சுற்றுப்பயண விவரம் வருமாறு:

**17.4.2026 வெள்ளிக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | காங்கேயம் | பேருந்து நிலையம் அருகில், காங்கேயம். |
| காலை 10.30 மணி | உடுமலைப்பேட்டை | புதிய பேருந்து நிலையம் அருகில், வெங்கடகிருஷ்ணா வீதி, உடுமலைப்பேட்டை. |
| காலை 11.30 மணி | உடுமலைப்பேட்டை | ஊஞ்சவேலம்பட்டி, பொள்ளாச்சி. |
| மாலை 3.30 மணி | கிணத்துக்கடவு | நான்கு வழிச்சாலை சந்திப்பு, மலுமிச்சம்பட்டி. |
| மாலை 4.30 மணி | கிணத்துக்கடவு | பேருந்து நிலையம் அருகில், வெள்ளலூர். |
| மாலை 5.30 மணி | கோவை தெற்கு | வி.கே.கே.மேனன் சாலை, காந்திபுரம். |
| மாலை 6.30 மணி | மேட்டுப்பாளையம் | அபிராமி தியேட்டர் எதிரில், மேட்டுப்பாளையம். |
| இரவு 7.30 மணி | குன்னூர் | காமராஜர் சிலை அருகில், ஜான்சன்ஸ் ஸ்கொயர், கோத்தகிரி. |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 16.4.2026

கலைஞர் 100
1924 - 2023






மத்திய அரசின் தொகுதி மறுவரையறை மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து, திருச்சிராப்பள்ளி தென்னூரில் உள்ள அமைச்சரும் தெற்கு மாவட்ட செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் இல்லம் மற்றும் வி.என். நகரில் அமைந்துள்ள திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்திலும் கருப்புக்கொடி ஏற்றி தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளார் .



தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுக்க நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டி, தமிழ்நாட்டு மக்களை புறக்கணிக்கும் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு, தற்போது தொகுதி மறுசீரமைப்பு என்கிற பெயரில் தமிழ்நாட்டின் மக்கள் பிரதிநிதித்துவ குரலை ஒடுக்க நினைக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த ஜனநாயக விரோத போக்கை கண்டிக்கும்விதமாக, கழக தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படி இன்று திருவாரூர் மாவட்டசெயலாளர் பூண்டி கே. கலைவாணன் கருப்புக்கொடி ஏற்றி எதிர்ப்பை தெரிவித்தார்.



ஒன்றிய அரசு கொண்டுவரவுள்ள தொகுதி மறு சீரமைப்பு சட்டத்தை கண்டித்தும், அதை கைவிடக் கோரியும், வீடுகள் தோறும் கருப்புக் கொடி ஏற்றி போராட்டம் நடத்த வேண்டும் என கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் வீடுகளில் கருப்பு கொடி ஏற்றி போராட்டம் நடைபெற்றது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதியின் வேட்பாளருமான மதியழகன் எம்.எல்.ஏ, வீட்டில் கருப்புக் கொடி ஏற்றி தொகுதி மறுசீரமைப்பு சட்ட நகலை எரித்து தொகுதி மறுசீரமைப்பு சட்டத்தை கைவிட வேண்டும் என கண்டன கோஷங்களை எழுப்பினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டப் பொருளாளர் கதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தோழர்கள் உடன் இருந்தனர்.